ஆகஸ்ட் 2002
ஒளி : 01
கீற்று : 03
Volume : 01 Issue : 03
පුත්තොළි Puththoli

# புத்தொளி

அரசாங்க தகவல் திணைக்களத்தின் மாதாந்த செய்திப் பத்திரிகை

# பிரதமர் ரணிலின் செயற்பாடுகளுக்கு சர்வதேச நாணய நிதியம் பாராட்டு

சர்வதேச நாணய நிதியம் எதிர்வரும் செப்டம்பர் மாதம் பல்வேறுபட்ட முக்கிய விடயங்களை இலங்கையில் மேற்கொள்ளவுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் ஹொஸ்ட் கொஹ்லரை சந்தித்தபோது இதனைக்குறிப் பிட்டார். இச்சந்திப்பு வொஷிங்டன் நகரிலுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் தலைமைக்காரியால யத்தில் இடம் பெற்றது.

வீழ்ச்சியடைந்துள்ள இலங்கையின் பொருளாதாரத்தினை விரைவில் கட்டியெழுப்பப்படவேண்டியதன் அவசியத்தையும், துரித புனர் நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதனையும் இங்கு பிரதமர் சுட்டிக்காட்டினார். குறிப்பாக நட்டம் ஈட்டும் அரச நிறுவனங்களின் சுமையை மக்கள் மீது சுமத்தாது அந்நட்டத்தினை அந்நிறுவனமே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற புதிய கொள்கையின் பிரகாரம் இலங்கை எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் கடன் சுமையை மக்களிடமிருந்து பெறுவதை தவிர்த்துக்கொண்டத னால் எண்ணை விலையேற்றத்தினை குறைக்கமுடிந்ததாகவும் இலங்கைப் பிரதிநிதிகள் இங்கு சுட்டிக் காட்டினார்கள்.

பொருளாதாரத்தினை சீர்செய்வதில் பிரதமர் பொறுப்புடன் செயற்படு வதாகவும் இதனால் தான் மகிழ்ச் சியடைவதாகவும் கொஹ்லர் குறிப் பிட்டார். கடந்த சில வருடங்களில் இது தொடர்பான ஒரு பொடுபோக்குத் தன்மையினை காணக்கூடியதாக இருந்ததனால் இலங்கைத் தொடர்பாக நிதியத்தின் அங்கத்த வர்களிடையே ஒருவித கேள்விக் குறிகள் வெளிப்பட்டதாகவும் நிதியத்தின் முக்கியஸ்தர்கள் சுட்டிக்காட்டினர்.

ஆயினும், கடந்த ஆறு மாத காலத்தி னுள் இலங்கையின் பொருளாதா ரத்தில் தெளிவான வேறுபாடு ஒன்றினை ஏற்படுத்தியுள்ளதனால் செப்டம்பர் மாதம் நடைபெறும் சர்வதேச நாணய நிதிய மகாநாட்டு அங்கத்தவர்கள் கூட்டத்தின்போது இலங்கை சம்பந்தமாக பயனுள்ள முடிவுகள் பல மேற்கொள்ளவிருப்ப தாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.



இலங்கைக்கு விஜயம் செய்த பாகிஸ்தான் ஜனாதிபதி முஷர்ரபுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க காணப்படுகிறார்.

## கொழும்பு மாவட்ட அபிவிருத்திக்கு ரூ. 3 கோடியே 11 லட்சத்து 21 ஆயிரம் நிதி ஒதுக்கீடு

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதியின் மூலம் இந்த ஆண்டில் கொழும்பு மாவட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென மூன்று கோடியே பதினொரு இலட்சத்து இருபத்தோராயிரம் ரூபா நிதி கிடைத்திருப்பதாக கொழும்பு மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பிரிவு பிரதிப் பணிப்பாளர் கலாநிதி தனபால பாலகே தெரிவித்தார்.

கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களினால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டிருக்கும் இந்நிதியைக்கொண்டு இம்மாவட்டத்தில் பல்வேறு கருத்திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர்களினால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளின்படி ஒரு சில அபிவிருத்தி திட்டங்கள் பிரதேசச் செயலாளர் மட்டத்திலும் ஏனையவை அந்தந்த பிரதேசச் சபை, மாநகர சபை மட்டத்திலும் மேற்கொள்ளப்படும்.

இது தொடர்பான மாவட்ட அபிவிருத்திக் கூட்டம் ஒன்று அண்மையில் மேற்குப் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் அல்-ஹாஜ் எம்.எச். முஹம்மது தலைமையில் கொழும்பு கச்சேரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கொழும்பு மாவட்ட உறுப்பினர்களான தினேஷ் குணவர்தன, அல்-ஹாஜ் ஏ.எச்.எம். பவுஸி, சுனில் ஹதுன்னெத்தி, கொழும்பு மாவட்ட செயலாளர் திரு. ஜோசப் சில்வெஸ்டர் உட்பட மாநகர சபை, பிரதேசச் சபை உறுப்பினர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் அரச அதிகாரிகள் பலரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கொழும்பு மாவட்டத்தில் அபிவிருத்தித்திட்டங்களை செயல்படுத்தும் போது பொது நிர்வாக அமைச்சின் திறைசேரி சுற்று அறிக்கையின்படி டெண்டர் முறையை கண்டிப்பாக கடைபிடிக்கும்படி அமைச்சர் எம்.எச். முஹம்மது இக்கூட்டத்தின் போது சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார்.

### வாழ்த்துக்கள்

ஆசிய மெய்வல்லுநர் போட்டியில் தங்கப்பதக்கங்களை வென்று தந்த ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜயசிங்கவையும், ஏனைய வீர, வீராங்கனைகளையும் "புத்தொளி" வாழ்த்துகிறது.

(- ஆர் -)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் பீட ஆலோசகர்:
எம். அலி ஹசன்
(உதவி தகவல் பணிப்பாளர்)
பிரதம ஆசிரியர்:
நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்
(மாவட்ட தகவல் அதிகாரி - கொழும்பு)
ஆசிரிய பீடம் :
எம்.எஸ்.எம். மிஸ்வர்

'புத்தொளி'
அரசாங்க தகவல் திணைக்களம்
163, பொல்ஹேன்கொட
கொழும்பு - 05. தொ.பேசி : 829758.59

## வடக்கு கிழக்கு இந்து ஆலய புனரமைப்புக்கு நிதி

வடக்கு கிழக்கில் யுத்தத்தினால் சேதமடைந்துள்ள இந்து ஆலயங்களை புனரமைக்க 90.095 மில்லியன் ரூபா தேவையென இந்து சமய விவகார அமைச்சர் தி. மகேஸ்வரன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் சேதமடைந்த ஆலயங்களை புனரமைப்பது குறித்து அமைச்சர் மகேஸ்வரன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

மேற்படி பேச்சுவார்த்தை தொடர்பாக அமைச்சர் மகேஸ்வரன் விளக்கிக் கூறுகையில்:

யுத்தத்தினால் இந்து ஆலயங்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவை பற்றிய தகவல்களை எமது அமைச்சு சேகரித்துள்ளது.

அவற்றை புனரமைப்பதற்கு 90.095 மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது. இது எமது குறைந்தபட்ச மதிப்பீடாகும்.

இதனை பிரதமருக்கு சமர்ப்பித்துள்ளோம்.

அத்தகைய ஆலயங்கள் பற்றிய விபரங்களை சமர்ப்பித்து பிரதமரிடம் நிதியைப் பெற்று ஆலயங்களை உடனடியாக புனரமைப்புச் செய்யவுள்ளோம்.


நல்லூர் கந்தசாமி கோவில் ஆலய நாவலர் மணிமண்டபத்தை இந்து கலாசார அமைச்சு பொறுப்பேற்றுள்ளது. அதனை புனரமைப்புச் செய்து மக்களின் பாவனைக்கு அனுமதிக்கவுள்ளோம்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் ஊடகவியலாளர்கள் அங்கு தங்கிச் செல்வதற்குரிய ஏற்பாடுகளும் செய்யப்படவுள்ளன.

# அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு சர்வதேச மட்டத்தில் ஆதரவு

*- பிரதமர் -*

தனது அமெரிக்க விஜயமானது இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு பெரிதும் வழிவகுப்பதுடன் இரு நாடுகளுக்கு



மிடையிலான நட்புறவையும் நெருக்கடையச் செய்துள்ளதென பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் எதிர்காலத்திற்குப் பயனளிக்கும் பல்வேறு விடயங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு அமெரிக்க விஜயம் ஏதுவாக அமைந்துள்ளதாகவும் பிரதமர் ரணில் மேலும் தெரிவித்துள்ளார்.

தனது அமெரிக்க விஜயம் குறித்து கருத்து தெரிவித்துள்ள பிரதமர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

இலங்கையின் அரச தலைவர் ஒருவருக்கு அமெரிக்காவின் ஜனாதிபதி உள்ளிட்ட அரச உயர்மட்ட அதிகாரிகளைச் சந்திப்பதற்கான வாய்ப்பு மிக நீண்ட காலத்தின் பின்னரே கிடைத்தது. இந்த வாய்பைப் பயன்படுத்தி சமாதான முன்னெடுப்புகள் மற்றும் பொருளாதாரம் குறித்து அமெரிக்க அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவர முடிந்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டப்ளியு. புஷ் நமது அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளை ஏற்றுக்கொண்டுள்ளதுடன் அவரது ஒத்துழைப்பை நல்குவதாகவும் கூறியுள்ளார். விசேடமாக சமாதான நடவடிக்கைகளுக்கும், பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுக்கும் அவரது முழுமையான ஒத்துழைப்பு கிடைத்துள்ளது. இது நமது அரசாங்கத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

அதே போன்று அமெரிக்க காங்கிரசின் சிரேஷ்ட உறுப்பினர்கள் அனைவரும் நமது வேலைத்திட்டங்களை ஏற்றுக்கொண்டு அவற்றை வெற்றியுடன் முன்னெடுத்துச் செல்ல தமது ஒத்துழைப்பை தெரிவித்துள்ளமையும் நமக்குக் கிடைத்த வெற்றியாகும்.

அந்த ஒத்துழைப்பின் பிரதிபலனாக எமது வர்த்தக, முதலீட்டுக் கொள்கை தொடர்பான ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட முடிந்துள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் ஏற்றுமதி, இறக்குமதி தொடர்பாகவும், சுதந்திர வர்த்தக நடவடிக்கை தொடர்பாகவும், முதலீடு தொடர்பாகவும் எமது நாட்டுக்கு நன்மை பயக்கும் பல ஒப்பந்தங்களைக் கைச்சாத்திட எதிர்பார்த்துள்ளோம் அதே போல் அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையில் மும்முறைத் தீர்வை தொடர்பான ஒப்பந்தமொன்று விரைவில் கைச்சாத்தாகும். அனைத்திலும் அமெரிக்க வர்த்தக தொடர்புகள் பலப்படுத்தப்பட்டுள்ளது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு வழிவகுக்கும்.

இளைஞர் படையணியின் நடவடிக்கைகளுக்கும் இளைஞர், யுவதிகளின் கல்வி நடவடிக்கைகளுக்கும் உதவ அமெரிக்காவின் "பிஸ்கோ" அமைப்பு விருப்பம் தெரிவித்துள்ளது.


எமது நாட்டில் நடைமுறைப் படுத்தப்படும் USAID அமெரிக்க உதவி நடவடிக்கைகளின் கீழ் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக புதிய உதவித் திட்டமொன்றை வழங்கவும் அமெரிக்கா இணக்கம் தெரிவித்துள்ளது. இந்த விஜயத்தின் போது உலகவங்கியுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பயனாக தகவல் தொழினுட்பத் துறையை துரித கதியில் அபிவிருத்திச் செய்து நாட்டின் அபிவிருத்தியை துரிதப்படுத்தும் "ஈ லங்கா" என்ற பெயரில் பாரிய திட்டமொன்றுக்கு நிதியுதவி வழங்க இணக்கம் காணப்பட்டது இலங்கைக்கு நல்ல பயன்கள் கிடைக்கும் என்பது தெளிவாகிறது. இது எங்கள் அரசாங்கத்திற்கு கிடைத்த வெற்றியெனக் கூறலாம். அதே போல் இவ்விஜயத்தினால் அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான தொடர்புகள் அதிகரித்துள்ளன. நட்புறவும் நெருக்கமடைந்துள்ளது.

(4ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டில் நிரந்தர சமாதானத்தை பிரதமர் ரணில் கொண்டு வருவார்

*- வீ. ஆனந்த சங்கரி -*



புலிகளும் அரசாங்கமும் இம்முறை உயர்மட்டத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டபடியால் சமாதானப்பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்கும். என தாம் நம்புவதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான திரு வீ. ஆனந்த சங்கரி தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராக நியமிக்கப்பட்ட பின்னர் முதன் முதலாக "புத்தொளிக்கு" அவர் அளித்த பேட்டி ஒன்றிலேயே இதனைத் தெரிவித்தார.

அப்பேட்டியின்போது திரு. ஆனந்த சங்கரி இலங்கை அரசாங்கத்தின் சமாதான முயற்சிகள் பற்றி மேலும் கருத்துத் தெரிவிக்கையில் : யுத்த நிறுத்தத்தின் மூலம்தான் சமாதானத்தை எட்ட முடியும் என்ற நம்பிக்கையுடன் பிரதமர் ரணில் விக்ரமசிங்க செயல்படுகிறார். இனப்பிரச்சினை தீர்வுக்காக நாம் எந்த ஒரு பிரச்சினையை முன்வைத்தாலும் அவற்றுக்கு உடனுக்குடன் தீர்வுகாண முற்படுகிறார். இதன் மூலம் இனப்பிரச்சினை தீர்வக்கு தனது விசுவாசத்தைக் காட்டுகிறார். நாட்டில் நிரந்தர சமாதானம் மலர வேண்டும் என்பதில் அரசும் புலிகளும் மிகுந்த விசுவாசம் கொண்டுள்ளன. இதனால்தான் இன்று தமிழ் மக்கள் மட்டுமன்றி சிங்கள, முஸ்லிம் மக்கள் எல்லோரும் மிகவும் தைரியமாக வடபகுதிக்கு உல்லாசப்பயணம் வருகிறார்கள். குறிப்பாக சிங்கள அரசியல் தலைவர்கள் கூட இன்று அடிக்கடி யாழ்ப்பாணம் செல்கிறார்கள். இதனை சமாதானத்தின் முன்னோடி நடவடிக்கையாக கருதுகிறேன்.

அதே நேரம் புலிகள் இயக்கத்திற்கு ஏற்கனவே விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கப்பட வேண்டும். புலிகளும் அரசும் நம்பிக்கையின் அடிப்படையிலேயே நீண்டகால யுத்தத்தை நிறுத்தி புரிந்துணர்வு ஒப்பந்தமும் செய்து கொண்டனர்.

இதற்குப்பின்னரும் புலிகள் இயக்கத்திற்கு ஏன் தடை உத்தரவு? கைதிகளோடு பேசும்போதுதான் கைவிலங்கு. ஆனால் இங்கே பேசித்தீர்ப்பது என்று வரும்போது இரு தரப்பினர்களுக்கும் சம அந்தஸ்து வேண்டும். எனவே புலிகள் மீதான தடை நீக்குவது நிபந்தனையல்ல ; சுய கௌரவம். எனவே தடை உத்தரவை நீக்கினால்தான் தாழ்வு மனப்பான்மை நீங்கும். அவர்களிடையே உற்சாகமும் நம்பிக்கையும் ஏற்படும்.

இதே வேளை சமாதான முயற்சிகளுக்கு மற்றுமொரு முட்டுக்கட்டையாக இருப்பது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறைதான். இது ஒரு சாபக்கேடாகும். இந்த ஆட்சிமுறை ஒழியவேண்டும் என்பதும் எமது எதிர்பார்ப்பாகும்" இப்படி ஆனந்த சங்கரி குறிப்பிட்டார்.

## ஆபாச பதாதைகளுக்கு விரைவில் தடை

சினிமா திரைப்படங்களில் வரும் ஆபாச காட்சிகளை விளம்பரமாக ஒட்டுவதும், அவற்றைத் திரையரங்குகளின் முன்பாகப் பெரிய விளம்பரமாக, பதாதைகளாக அமைப்பதும் தடை விதிக்கப்படும் என நீதி, புத்தசாசன அமைச்சர் டபிள்யூ.ஜே.எம். லொக்கு பண்டார தெரிவித்துள்ளார்.

இவ்வாறு விளம்பரங்களை ஒட்டுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். "எமது கலாசாரம் பாதிக்காமலும், இளம் சமுதாயத்தின் எதிர்காலம் சீரழியாமலும் செயற்படவேண்டும். அதற்குப் பொது மக்களும் இவற்றைத் தடுக்க முன்வர வேண்டும்" என்றும் அவர் கூறினார்.

சமாதான நீதவான்கள் பதவிகள் இனிமேல் அரசியல் ரீதியாக வழங்கப்பட மாட்டாது. புதிதாக நியமிக்கப்படும் சமாதான நீதவான்களுக்கு அவர்களின் பணிகள் தொடர்பாகப் பயிற்சிகள் அளிக்கப்படும்.

அகில இலங்கைச் சமாதான நீதவான் பதவிகள் மட்டுப்படுத்தப்பட்டு வழங்கப் படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

சில சமாதான நீதவான்கள் தொடர்பாகப் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றன. அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்களின் பதவிகள் ரத்துச் செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

## இவர்கள் இப்படிச் சொன்னார்கள்

- "சமாதானத்தின் அடையாளம் மஞ்சள் நிறமாகும். ஆனால் அந்த நிறத்தை அணிந்திருப்பவர்கள் சமாதானத்தின் எதிரிகள்."
  - அமைச்சர் லொக்கு பண்டார -
  (வீரகேசரி 12-06-2002)
- "சமாதானத்தை வெறுப்பவர்கள் நாட்டுக்கும் அவர்களது வாரிசுகளுக்கும் துரோகம் இழைப்பவர்கள்."
  - அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் -
  (வீரகேசரி 02-07-2002)
- "சமாதான முயற்சிகளை சீர்குலைத்து, புலிகளை காட்டுக்கு அனுப்பி போராளிகளாக்கக் கூடாது."
  - அரியநாயகம் சந்திர நேரு எம். பி. -
  (தினக்குரல் 02-07-2002)
- "இலங்கையில் சமாதானப் பயணம் தொடர தமிழக தலைவர்கள் குறுக்கே நிற்கக் கூடாது."
  - எம். எஸ். செல்லச்சாமி -
  (தினகரன 23-07-2002)
- "யுத்தத்தில் யாருமே வெற்றியீட்டவில்லை. தமிழ், சிங்கள இளைஞர்களே அநியாயமாக பலியானார்கள்."
  - அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா -
  (வீரகேசரி 23-07-2002)
- "அனைவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய சமாதானத்தை வென்றெடுப்பதே எமது கடமையாக இருக்க வேண்டும்."
  - திரு. மகிந்த ராஜபக்ஷ -
  (தினக்குரல் 18-07-2002)
- "முழு நாட்டுக்குமே சமாதானம் தேவை. அதற்காக ஐக்கியப்படுவோம்."
  - தம்ம கவேஸி தேரர் -
  (நவமணி 04-08-2002)

## இலங்கைக்கு சீனா ரூ. 625 மில்லியன் உதவி

*சீனா அரசு இலங்கைக்கு 625 மில்லியன் ரூபாவை உதவியாக வழங்கவுள்ளது. மின் சக்தி, எரிபொருள் அமைச்சர் கரு ஜயசூரிய சீனாவுக்கு மேற்கொண்ட விஜயத்தின் பயனாக இது வழங்கப்படவுள்ளது.*

*இந்த 625 மில்லியன் ரூபாவில் 250 மில்லியன் ரூபா திருப்பிக் கொடுக்காத அன்பளிப்பாக வழங்கப்படும். எஞ்சிய 375 மில்லியன் ரூபாவையும் வழங்க 30 வருடகால அவகாசம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணி வெடிகளை கடுகதியில் அகற்றிடுங்கள்

வடக்கு கிழக்கு பகுதிகளில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ள இடங்களை இனங்கண்டு அகற்றும் பணிகள் தற்சமயம் நடைபெறுகின்றன.

பிரித்தானியாவை தலைமையாகக் கொண்டியங்கும் அரச சார்பற்ற அமைப்பான ஹலோஸ்ட் நிறுவனத்தின் வெளிக்கள அதிகாரி சிமன் போட்டர் தலைமையில் வந்திருக்கும் குழுவினர் இப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்கள் ஐரோப்பிய ஒன்றியத்தின் மனித உரிமைகள் பிரிவின் வேண்டுதலின் பேரில் இலங்கை வந்துள்ளனர்.

வடக்கு கிழக்கிலுள்ள கண்ணி வெடிகள் இருக்கும் இடங்களை இனங்காணும் பணிகளை 6 மாத காலத்தில் பூர்த்தி செய்ய இருக்கின்றனர்.

அதன்பின் வன்னிப் பகுதிக்கும் தமது சேவையை விஸ்தரிக்க உத்தேசித்துள்ளனர். நல்லூர் நாவலர் வீதியில் தமது அலுவலகமொன்றையும் திறந்துள்ளனர்.

வன்னியில் கண்ணிவெடி மற்றும் வெடி பொருட்களின் அபாயம் குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது.

யுத்தகாலத்தில் புதைக்கப்பட்ட வெடி பொருட்களின் அபாயம் இன்னும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. தினசரி இப்பகுதி மக்கள் கண்ணிவெடிகளுக்கு பலியாகின்றனர். மற்றும் சிலர் கண்ணிவெடிகளில் சிக்கி தமது கை, கால்களை இழக்கின்றனர். பிறக்கும் குழந்தைகள் அங்கவீனர்களாக பிறப்பதற்கும் இது முக்கிய காரணமாகின்றது.

சமாதானம் ஏற்பட்டால் மட்டும் போதாது. பிள்ளைகள் அங்க குறைபாடு இன்றி வாழ வேண்டும். இராணுவமும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளும் இதனை உணர்ந்து செயற்பட்டால் அதுவே எதிர்கால சமுகத்தினருக்கு அவர்கள் செய்யும் பெரும் கைம்மாறாகும்.

- எம். எஸ். எம். மிஸ்வர் -

## பிரான்ஸும் வரவேற்கிறது

*அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்த முன்வந்திருப்பதை பிரான்ஸ் வரவேற்றுள்ளது. இருதரப்பும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அந்நாடு வலியுறுத்தியுள்ளது.*

## இலங்கையில் துறைமுக நிர்மாண பணிகளில் ஈடுபட மலேசிய அரசாங்கம் தயார்.

- மலேசிய தொழில் அமைச்சர் அறிவிப்பு -

இலங்கையில் துறைமுக நிர்மாண வேலைகளில் ஈடுபடுவதற்கு மலேசியா அரசாங்கம் தயாராக இருப்பதாகவும், நிர்மாணத்துறையில் முதலீடு செய்வது குறித்தும் தாம் ஆராய்ந்து வருவதாகவும் மலேசிய தொழில் அமைச்சர் டத்தோ ஸ்ரீ. எஸ். சாமிவேலு தெரிவித்தார்.

அண்மையில் பாராளுமன்றத்தில் துறைமுக அபிவிருத்தி, கப்பல்துறை, கிழக்கு அபிவிருத்தி, சமய, விவகார அமைச்சரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய தலைவருமான ரவூப் ஹக்கீமை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியபோதே மலேசிய அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் சாமி வேலுவுடன் இதுபற்றி நான்கு பேர் அடங்கிய மலேசிய தூதுக்குழு, அமைச்சர் ஹக்கீமை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியது. மலேசிய அரசாங்கத்தின் தொழில் அமைச்சு துறைமுக, இறங்குதுறை நிர்மாணம், நெடுஞ்சாலைகள் நிர்மாணம் என்பனவற்றில் கடல் கடந்த நாடுகளிலும் வெற்றிகரமாக ஈடுபட்டு வருவதாகவும் இந்தியா, ஜமேக்கா, பொஸ்னியா போன்ற நாடுகளிலும் தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு இருப்பதாகவும் மலேசிய அமைச்சர் கூறினார் அந்த அடிப் படையில் துறைமுக நிர்மாணம், நெடுஞ்சாலைகள் அமைத்தல், வீடமைப்புத் திட்டங்கள் போன்ற துறைகளில் மலேசிய அரசாங்கம் இலங்கைக்கு உதவ முடியுமென அமைச்சர் சாமிவேலு கூறினார்.

தற்சமயம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பத்து மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியுடன் கொழும்பு தெற்குத் துறைமுகம் அபிவிருத்திச் செய்யப்படுவதாகக் கூறிய அமைச்சர் ஹக்கீம் தெற்கில் காலி, அம்பாந்தோட்டை துறைமுகங்களும் கிழக்கில் திருகோணமலை, ஒலுவில் துறைமுகங்களும் அபிவிருத்திச் செய்யப்படுவதாகத் தெரிவித்தார். வடக்கில் காங்கேசந்துறை, பருத்தித் துறை துறைமுகங்களை அபிவிருத்திச் செய்வதற்கான செயல் திட்டங்கள் வகுக்கப்படுவதாகவும் அமைச்சர் கூறினார். தென்னிலங்கையில் துறைமுக அபிருத்திப் பணிகளை முன்னெடுக்கும் பொது சூழல் பாதிப்பு ஏற்படாத வகையிலும், முருகைக் கற்பாறைகள் சேதமாக்கப்படாமலும் மிகவும் அவதானத்துடன் செயல்பட வேண்டியுள்ளதாகவும் அமைச்சர் ஹக்கீம் எடுத்துக் கூறினார். துறைமுக அபிவிருத்தி, பாரம்பரிய மீன்பிடி தொழிலைப் பாதிக்காத வண்ணம் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியத்தையும் அமைச்சர் ஹக்கீம் சுட்டிக்காட்டினார்.

**அரசாங்கத்தின் .......** (2ம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச ஆதரவு இப்போது எமக்கு இருக்கிறது. எமது கொள்கைகளுக்கும் செயல் திட்டங்களுக்கும் சர்வதேச ரீதியிலான ஒத்துழைப்பு கிடைத்துள்ளது. இதன் மூலம் நாம் சரியான திசையிலே செல்கிறோம் என்பது மீண்டும் உறுதியாகியுள்ளது.

எமது பயணம் இலகுவானதல்ல அது மிகவும் கடினமான பயணம் என்பதை நான் அறிவேன். எத்தகைய கஷ்டங்கள் வந்தாலும் உங்கள் அரசாங்கம் மக்களினதும், நாட்டினதும் எதிர்காலத்தை கட்டியெழுப்பும். இந்த இலக்கையடைய ஒத்துழைப்பு எங்கள் அரசாங்கத்திற்கு கிடைக்குமென நம்புகிறேன்.

புத்தொளி

அரசாங்க தகவல் திணைக்களம்

163, பொல்ஹேன்கொட

கொழும்பு - 05.

தொலைபேசி இல.: 829758, 59

பெக்ஸ் : 829753

ஈ-மெயில் : infodept@slt.lk வெப்தளம் : www.news.lk

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org